தொழிலாளர்களுக்கு எதிராக சட்டம் கொண்டு வருவதா துணிச்சல்? எடப்பாடி பழனிசாமி கேள்வி

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து விட்டது

சேலம், மே.2–

தொழிலாளர்களுக்கு எதிராக சட்டம் கொண்டு வருவது துணிச்சலா என்று முதல்வர் ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி மே தின பொதுக்கூட்டத்தில் காட்டமாக கேட்டார்.

சேலம் மாநகர் மாவட்ட அண்ணா தி.மு.க. கொண்டலாம்பட்டி பகுதி மற்றும் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் மேதினபொதுக்கூட்டம் நேற்று இரவு தாதகாப்பட்டி கேட் அருகில் நடந்தது. மாநகர் மாவட்ட செயலாளர் ஜி.வெங்கடாஜலம் தலைமை தாங்கினார். பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஆர்.சுந்தர பாண்டியன், கொண்டலாம்பட்டி பகுதி செயலாளர் சண்முகம் வரவேற்றார்கள்.

கூட்டத்தில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசும் போது கூறியதாவது:–

கோடிக்கணக்கான உழைப்பாளர்களால் இந்த உலகம் இயங்கி கொண்டிருக்கிறது. ஏனென்றால் உழைக்கிற வர்க்கத்துக்கு துணை நிற்கிற கட்சி அண்ணா தி.மு.க.

இன்றைய தினம் தி.மு.க. அரசு சட்டமன்ற கூட்டத்தொடரில் ஒரு சட்ட மசோதாவை கொண்டு வந்தது. தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் எதிர்த்தன. நான் ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டேன். தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த தொழிலாளர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிபணிந்து அவர்

கொண்டு வந்த சட்டத்தை அவரே நிறுத்திவிட்டார்.

இதுகுறித்து பெருமையாக பேசுகிறார். சட்டத்தை கொண்டு வருவதற்கு துணிச்சல் வேண்டும் என்று பெருமையாக பேசுகிறார். என்ன துணிச்சல். தொழிலாளர்கள் பாதிக்கப்படுவது தான் துணிச்சலா? தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் சட்டத்தை கொண்டு வந்தால் அது நல்லது.

இன்றைக்கு ஒட்டுமொத்த தொழிலாளர்களும் ஒட்டுமொத்த எதிர்கட்சிகளும் கண்டனம் தெரிவித்த காரணத்தினாலே அஞ்சி பயந்து இன்றைக்கு கொண்டு வந்த சட்டத்தை நிறுத்தி வைத்துள்ளார். தி.மு.க. ஆட்சியில் என்ன பணி நடைபெற்றது. அண்ணா தி.மு.க. ஆட்சியில் என்ன நடைபெற்றது என்பதை மக்கள் எண்ணி பார்க்க வேண்டும். தி.மு.க. அரசு எந்த திட்டத்தையும் நிறைவேற்றவில்லை.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று 2 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் சேலம் மாவட்டத்துக்கு எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. அதனால் தான் தி.மு.க. ஆட்சி எப்போது போகும் என்று தமிழகத்தின் ஒட்டுமொத்த குரலாக உள்ளது. தி.மு.க. பொறுப்பேற்று 2 ஆண்டு காலத்தில் ரூ.30 ஆயிரம் கோடியை உதயநிதி ஸ்டாலினும், சபரீசனும் என்ன பண்றது என்று தெரியாமல் தடுமாறி கொண்டிருப்பதாக நிதி அமைச்சர் தான் கூறி அம்பலப்படுத்துகிறார். இதை நாங்கள் கூறவில்லை. இன்னும் பல கேசட்டுகள் வர உள்ளன. இது குறித்து மு.க.ஸ்டாலின் எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. அப்படி என்றால் இது உண்மையான தகவல் தானே.

தி.மு.க. கூட்டணி காணாமல் போகும்

இதுகுறித்து தி.மு.க.வில் அங்கம் வகிக்கிற எந்த கட்சியும் கேட்காது. அடுத்த தேர்தல் வரும் போது மக்கள் கேட்பார்கள். அந்த கூட்டணி கட்சிகள் அனைத்தும் காணாமல் போய் விடும். அண்ணா தி.மு.க.வினர் சுட்டிக்காட்டினால் உடனடியாக வழக்கு போடுவார்கள்.

ஆட்சி மாறினால் காட்சி மாறும். இதற்கு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள். தி.மு.க. பொறுப்பேற்றதில் இருந்து கமிஷன், கலெக்சன், கரப்சன் ஆகியவற்றை சரியாக செய்கிறது. எல்லா துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை நடக்கிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டது. சட்டமன்றத்தில் போலீஸ் மானிய கோரிக்கையில் 2 மணி நேரம் புள்ளி விவரத்துடன் எடுத்துரைத்தேன். அதை மட்டும் ஒளிபரப்பு செய்திருந்தால் மக்கள் மு.க.ஸ்டாலினை பார்த்து எள்ளி நகையாடி இருப்பார்கள். மக்களின் வரிப்பணத்தில் ரூ.88 கோடியில் மெரினா கடலில் கருணாநிதிக்கு பேனா சிலை எதற்கு? அறிவாலயத்தில் வைத்துகொள்ள வேண்டியது தானே? நாட்டு மக்களை பற்றி சிந்திக்காமல் வீட்டை பற்றி சிந்திக்கிற கட்சி தி.மு.க. ஆனால் என்றைக்கும் மக்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் பாடுகிற கட்சி அண்ணா தி.மு.க. தான்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி. பன்னீர்செல்வம், மாநகர் மாவட்ட பொருளாளர் பங்க் எஸ். வெங்கடாசலம், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எம்.கே.செல்வராஜ், ரவிச்சந்திரன், சக்திவேல், முன்னாள் மேயர்சவுண்டப்பன், பகுதி செயலாளர் பாண்டியன், மாநகர மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் செங்கோட்டையன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் புதிதாக 274 பேருக்கு கொரோனா

சென்னை, மே 2–

தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 274 பேர் கொரோனா பாதிப்பு அடைந்து உள்ளனர். இதில் 144 ஆண்கள் மற்றும் 130 பெண்கள் அடங்குவார்கள்.

அதிகபட்சமாக சென்னையில் 49 பேருக்கும், கோவையில் 35 பேருக்கும், சேலத்தில் 23 பேருக்கும் மொத்தம் 34 மாவட்டங்களில் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 490 பேர் குணம் அடைந்தனர். சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 498 ஆக உள்ளது. நேற்று தமிழ்நாட்டில் கொரோனா தொற்றால் ஈரோட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த தகவல் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

"ம.தி.மு.க.வுக்கு இனி எதிர்காலமே இல்லை: தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பேன்"

அவைத்தலைவர் திருப்பூர் துரைசாமி பேட்டி

திருப்பூர், மே.2–

ம.தி.மு.க.வுக்கு இனி எதிர்காலமே இல்லை என்றும், தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பேன் என்றும் ம.தி.மு.க. அவைத்தலைவர் திருப்பூர் துரைசாமி கூறினார்.

ம.தி.மு.க. அவைத்தலைவர் திருப்பூர் துரைசாமி கடந்த சில நாட்களுக்கு முன்பு பொதுச்செயலாளர் வைகோவுக்கு எழுதிய கடிதத்தில் வாரிசு அரசியலை கண்டித்தும், ம.தி.மு.க.வை தி.மு.க.வுடன் இணைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ம.தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் துரை வைகோ, கட்சியில் குழப்பத்தை ஏற்படுத்த துரைசாமி முயற்சிக்கிறார் என்று பதிலடி கொடுத்தார்.

இந்த நிலையில் நேற்று திருப்பூர் ஊத்துக்குளி ரோட்டில் உள்ள ம.தி.மு.க. தொழிற்சங்க அலுவலகமான எம்.எல்.எப். அலுவலகத்தில் மே தினவிழாவையொட்டி திருப்பூர் துரைசாமி தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது.

வைகோ பதில் இல்லை

பின்னர் துரைசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

எனக்கு பின்னால் கட்சி நிர்வாகிகள் யாரும் இல்லை என்று சொல்கிறார்கள். இன்று (நேற்று) நடைபெற்ற கொடியேற்று விழா நிகழ்ச்சியில் தொழிலாளர்களும், தொழிற்சங்க நிர்வாகிகளும் எத்தனை பேர் கலந்து கொண்டனர் என்பதை பார்த்தாலே தெரியும். தொழிற்சங்க சொத்து தொடர்பாகவே பிரச்சினை நடைபெறுவதாக பேசப்படுகிறது. அதை தெளிவுப்படுத்தவிரும்புகிறேன். தொழிற்சங்க சொத்துகளை துரைசாமி தூக்கிக்கொண்டு சென்று விட்டதாக பொதுச்செயலாளர் வைகோ குற்றம் சாட்டி உள்ளார்.

சங்கத்தை பொறுத்தவரை பொதுச்செயலாளர், பொருளாளர் என இணைந்துதான் பொருளாதாரத்தை கையாள முடியுமே தவிர, தனிப்பட்ட நபர் யாரும் சொத்தை எடுத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு தொழிற்சங்கத்தையும் அமைப்பு சட்டம் மட்டுமே கட்டுப்படுத்த முடியுமே தவிர அரசியல் கட்சிகள் கட்டுப்படுத்த முடியாது.

ம.தி.மு.க. பலவீனம்

கட்சியில் பொருளாளர் என்ற பதவி உள்ளது. ஆனால் மு.கண்ணப்பனுக்கு பிறகு, மாசிலாமணி, கணேசமூர்த்தி ஆகியோர் பொருளாளராக இருந்த நிலையில் அவர்களுக்கு கட்சியின் வரவு, செலவு என்னவென்று தெரியாது. காசோலையில் அவர்கள் கையெழுத்து போட்டதும் இல்லை.

பொதுச்செயலாளர் வைகோவுக்கு இதுவரை 6 கடிதங்கள் எழுதி உள்ளேன். ஆனால் இதுவரை எந்த கடிதங்களுக்கும் பதில் வரவில்லை. வைகோவுக்கு மட்டுமே நான் பதில் சொல்லுவேனே தவிர வேறு யாருக்கும் நான் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. கட்சியில் நடந்த தேர்தல் அனைத்தும் பினாமி தேர்தலாகவே நடந்துள்ளது. சட்ட, திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவில்லை.

ம.தி.மு.க. தற்போது பலவீனப்பட்டுள்ளது. ம.தி.மு.க. என்ற கட்சிக்கு எதிர்காலமே இல்லை. எனவே இப்போதே தி.மு.க.வுடன் இணைத்து விட்டால் கட்சியில் உள்ள இளைஞர்களின் எதிர்காலம் நன்றாக இருக்கும். பெரியார், அண்ணா கொள்கைகளை வலியுறுத்த பாடுபடுவேன். தற்போது வரை ம.தி.மு.க. அவைத்தலைவராக உள்ளேன். புதிய கட்சி தொடங்கவோ, வேறு எந்த கட்சியில் சேரும் எண்ணமோ எனக்கு இல்லை. ஆனால் இன்றைய அரசியல் சூழலில் தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவிப்பேன். தற்போது எந்த அரசியல் கட்சியிலும் நியாயத்தை பேச முடியவில்லை. பேசினால் எதிர்ப்பு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தேவேந்திரகுல வேளாளர்களை பட்டியலிலிருந்து வெளியேற்றுங்கள்: தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மாபெரும் பொதுக் கூட்டம்

நிறுவன தலைவர் ஜான்பாண்டியன் தலைமையில் நடந்தது

செங்கல்பட்டு, மே 2–

தேவேந்திரகுல வேளாளர்களை பட்டியலிலிருந்து வெளியேற்றக்கோரி தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் நிறுவன தலைவர் பெ.ஜான்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பகுதி அம்பேத்கர் சிலை அருகில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மற்றும் அகில இந்திய தேவேந்திர குல வேளாளர் முன்னேற்ற சங்கம் இணைந்து நடத்தும் தேவேந்திரகுல வேளாளர்களை பட்டியலிலிருந்து வெளியேற்றக்கோரி மாபெரும் பொதுக் கூட்டம் அகில இந்திய தேவேந்திரகுல வேளாளர் முன்னேற்ற சங்கம் தலைவரும், தமிழக மக்கள் முன்னேற்ற கழக நிறுவனருமான டாக்டர் பெ.ஜான்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர்

டாக்டர் ஜா.பிரிசில்லாபாண்டியன் மற்றும் மாநில இளைஞரணி தலைவர் ஜா.வியங்கோ பாண்டியன் ஆகியோர் மக்களிடையே சிறப்புரை ஆற்றினார்கள். மாநில துணை பொதுச்செயலாளர்கள் ச.தமிழரசன், செ.நெல்லையப்பன், சண்முகசுதாகர், ஜெ. அருண்பிரின்ஸ், இரா. அமுத முரள , ஏடிடபின்யூ.நளினி சாந்தகுமாரி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர். செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் டாக்டர் கே.கே.பிரபு பாண்டியன், மாவட்ட தலைவர் பவுள், கூடுவாஞ்சேரி கே.செல்வகுமார், முத்து நகர் வி.பி.முத்து, திரிசூலம் ஜில்லா வெங்கட், குரோம்பேட்டை ஆறுமுகம், பல்லாவரம் ராமசாமி, பல்லாவரம் சந்திரசேகர், மணி, தினேஷ், சாமி, ஆரோக்கியசாமி, ஈசன் பாண்டியன், தாம்பரம் சிங்கராஜ், காட்டாங்குளத்தூர் ஒன்றிய தலைவர் ராபர்ட் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட சிறுபான்மை தலைவர் ஜ.ரியாஸ் மாலிக், திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகி தே.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காவல்துறை அறிவிப்பு

கடந்த 03.01.2023 ம் தேதி மாலை 16.00 மணிக்கு சுமார் 45 வயது மதிக்கத்தக்க பெயர், விலாசம் தெரியாத ஆண் நபர் உடல் நலக்குறைவு காரணமாக ஜவஹர்லால் நேருஅஞ்சப்பர் ஹோட்டல் அருகில் இறந்துவிட்டதாக தெரிய வந்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இறந்து போன நபரின் உறவினர்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இவர் சுமார் 5 அடி உயரம், மாநிறம் ஒல்லியான திரேகம் கொண்ட மேற்படி நபர் இறந்துவிட்டார். இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் கீழ்கண்ட காவல் நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

காவல் உதவி ஆய்வாளர்,
ஆ.10 எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையம்
சென்னை 78

பொது அறிவிப்பு

இந்த பொது அறிவிப்பு மூலமாக எல்லோருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் சென்னை-600 045. மேற்கு தாம்பரம், சண்முகம் சாலை, Flat No 23C, என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிகாரர் திரு. மிஸ்ரிலால் அவர்களின் குமாரர் திரு. M.பிரவீன் குமாருக்கு சொந்தமான சொத்து தாம்பரம் தாலுக்கா, சேலையூர் கிராமம், சீனிவாச நகர், பிளாட் நெ.3, G-1, அவந்திகா பிளாட்ஸ், சர்வே எண்கள். 286/1, 286/2A and 286/2B (Part) in Patta No.3143ன் படி சப் டிவிஷன் சர்வே எண். 286/1A1B, விஸ்தீரணம் 1995 சதுரடியில் கட்டப்பட்டுள்ள G3 அடுக்குமாடி குடியிருப்பும், 31 சதுரடி பிரிபடாத பாகத்திற்கான சொத்தின் அசல் கிரைய பத்திரம் மற்றும் அசல் கட்டிட ஒப்பந்த பத்திரமும் எனது கட்சிகார் பெயருக்கு பதிவு செய்யப்பட்டு அக்கிரையப்பத்திரம் எண். 5040/2016 தேதி 9.5.2016 மற்றும் கட்டிட ஒப்பந்த பத்திரம் எண். 5039/2016 தேதி 9.5.2016 சேலையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. எனது கட்சிக்காரர் 25.4.2023 அன்று மாநகர பேருந்தில் ராஜீகீழ்பாக்கத்திலிருந்து தாம்பரத்திற்கு வரும் போது அசல் ஆவணங்களை வைத்திருந்த கருப்பு வண்ண கைபை தொலைந்து விட்டது. எனது கட்சிகாரர் எங்கு தேடியும் அசல் ஆவணங்கள் வைத்திருந்த பை கிடைக்கவில்லை. மேற்படி சொத்தின் அசல் ஆவணங்களை வைத்த பையை யாரேனும் கண்டெடுத்தால் மேற்கண்ட எனது கட்சிகார் முகவரிக்கோ அல்லது எனது. முகவரிக்கோ தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் எனவே, மேற்கண்ட. பதிவ பத்திர அசல் ஆவணங்களை யாரேனும் தவறுதாலாக பயன் படுத்தினால், அது எந்தவிதத்திலும் எனது கட்சிகாரரை கட்டுப்படுத்தாது என இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ர. நாகராஜன்
வழக்கறிஞர்,
நெ. 56/129, முடிச்சூர் ரோடு, முதல் தளம்,
(Near IOB) மேற்கு தாம்பரம், சென்னை600 045.
செல் நெ. 80724 58714

பொது அறிவிப்பு

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், துரைமங்கலம், கோனேரிபாளையம் கிராமம், No.2/264, தெற்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் **நாகராஜ் மகன் சுரேஷ்குமார் வயது: 34 (ஆதார் எண்: 4433 7830 1572)** ஆகிய நான் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 22.04.2023ந் தேதி காலை 10.45 மணியளவில் எனது தந்தை நாகராஜ் பெயரில் உள்ள **பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில்** பதிவு செய்யப்பட்ட **அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை (ஆவண எண். 805/1992)** ஒரு பையில் எடுத்துக்கொண்டு எனது ஊரிலிருந்து கடலூர் மாவட்டம், கழுதூர் கிராமத்தில் உள்ள உறவினரை பார்ப்பதற்காகவும், மேற்படி பத்திரம் சம்மந்தமான இடத்தை விற்பனை செய்வது சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்வதற்காகவும், மேற்படி எனது ஊரில் இருந்து கழுதூர் பேருந்து நிறுத்துமிடம் வந்து, பேருந்து நிறுத்துமிடத்திற்கு எதிரே உள்ள ஜெராக்ஸ் கடையில் மேற்படி ஆவணத்தை ஜெராக்ஸ் எடுத்துவிட்டு மேற்படி எனது உறவினரை பார்ப்பதற்காக கழுதூர் பேருந்து நிறுத்துமிடத்தில் காத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பையில் வைத்திருந்த அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் காணாமல் போய்விட்டது. மேற்படி தொலைந்த பத்திரத்தை நான் பல இடங்களில் தேடியும் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தும் கிடைக்கவில்லை. எனவே மேற்படி பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் உடனே கீழ்கண்ட முகவரிக்கு தொடர்புகொள்ளவும், மேலும் மேற்படி ஆவணத்தை யாரேனும் தவறான வழியில் பயன்படுத்தினால் அது என்னை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது எனவும் அறியவும்.

சுரேஷ்குமார், த/பெ. நாகராஜ்
No.2/264, தெற்கு தெரு, கோனேரிபாளையம் கிராமம்,
துரைமங்கலம், பெரம்பலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்.

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

CIN : L65993TN1993PLC024861

பதிவு அலுவலகம்: பழைய எண்.11, புதிய எண்.2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி. நகர், சென்னை, தொலைபேசி எண்.044 49530954 | Email: abi@afslindia.in, Website : www.afslindia.in

31 மார்ச் 2023 ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
	31.03.2023 (தணிக்கை செய்தது)	31.12.2022 (தணிக்கை செய்யாதது)	31.03.2022 (தணிக்கை செய்தது)	31.03.2023 (தணிக்கை செய்தது)	31.03.2022 (தணிக்கை செய்தது)
1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம்	-	-	-	-	-
2. (a) இதர வருமானம்	31.10	42.59	12.59	1,984.23	46.37
3. மொத்த வருமானம் (1+2)	31.10	42.59	12.59	1,984.23	46.37
4. செலவினம்					
மூலதனப் பொருட்கள் உபயோக செலவு	-	-	-	-	-
வர்த்தகத்தில் பங்கு கொள்முதல்	-	-	-	-	-
மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள்	-	-	-	-	-
ஊழியர் செலவினம்	10.64	5.01	2.76	39.47	15.07
தேய்மானம்	0.93	0.43	2.44	1.81	9.18
இதர செலவினம்	15.82	9.77	9.31	83.41	40.81
மொத்த செலவுகள்	27.40	15.21	14.51	124.70	65.06
5. விதிவிலக்கான பொருட்கள்	-	-	-	-	-
6. வரிக்கு முன் லாபம்/(நஷ்டம் (3 - 4)	3.69	27.38	(1.92)	1,859.53	(18.69)
7. வரி செலவுகள்					
நடப்பு வரி	-	-	-	-	-
ஒத்திவைக்கப்பட்ட வரி	-	-	-	-	-
மொத்த வரி செலவுகள்	-	-	-	-	-
8. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (6 - 7)	3.69	27.38	(1.92)	1,459.53	(18.69)
9. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)	-	-	-	-	-
10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள்	-	-	-	-	-
11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (9-10)	-	-	-	-	-
12. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (8+11)	3.69	27.38	(1.92)	1,459.53	(18.69)
13. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி					
a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-
(ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-
b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-
(ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-
மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி					
14. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (12+13)	3.69	27.38	(1.92)	1,459.53	(18.69)
15. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-)	600.00	600.00	600.00	600.00	600.00
16. ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை பலமிழந்தது					

குறிப்பு:

1. 31 மார்ச் 2023ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 01 மே, 2023 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. 31 மார்ச் 2023ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை முடிவுகள் அறிக்கை 01 மே, 2023 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் ரீகூரூப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் இல்லை.

தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	31 மார்ச், 2023 அன்று	31 மார்ச், 2022 அன்று
ஆஸ்திகள்		
நடப்பு அல்லாத ஆஸ்திகள்		
சொத்து, ஆலை மற்றும் கருவிகள்	1.53	208.39
தற்போது நடைபெறும் மூலதனப் பணிகள்	-	-
தொட்டுணர முடியாத ஆஸ்திகள்	-	-
கடன்கள் மற்றும் முன் பணம்		37.04
நிதி ஆஸ்திகள்	-	-
முதலீடுகள்	64.97	41.23
இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள்	11.10	-
	77.59	286.66
நடப்பு ஆஸ்திகள்		
இருப்பு		
நிதி ஆஸ்திகள்		
முதலீடுகள்	-	-
வர்த்தகம் பெறப்பட்டது	-	-
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது	2,096.15	494.99
மேற்கண்டவை தவிர வங்கி இருப்பு	-	-
இதர நடப்பு ஆஸ்திகள்	466.19	-
	2,562.34	494.99
மொத்தம் - ஆஸ்திகள்	**2,639.94**	**781.64**
சம மற்றும் பொறுப்புகள்		
சமம்		
பங்கு மூலதனம்	600.00	600.00
இதர சமம்	1,633.80	174.27
	2,233.80	774.27
நடப்பு அல்லாத பொறுப்புகள்		
நிதி பொறுப்புகள்	-	-
கடன்கள்	-	-
	-	-
நடப்பு பொறுப்புகள்		
நிதி பொறுப்புகள்		
செலுத்த வேண்டியவை	-	-
இதர நடப்பு ஆஸ்திகள்	5.86	6.28
ஒதுக்கீடுகள்	400.28	1.09
	406.14	7.37
மொத்த சம மற்றும் பொறுப்புகள்	**2,639.94**	**781.64**

6. **நிகர லாப நல்லிணக்கம்**

முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த் ஏஎஸ் க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது	
	தணிக்கை செய்தது	
	31.03.2023 முடிந்த காலாண்டு	31.03.2022 முடிந்த காலாண்டு
ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம்	3.69	(1.92)
கழிக்க :		
இதர விரிவான வருமானத்தில் இயல்பான லாபம்/(நஷ்டம்)	-	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)	**3.69**	**(1.92)**
இதர விரிவான வருமானம்		
இதர விரிவான வருமானத்தில் இயல்பான லாபம்/(நஷ்டம்)	-	-
இதர விரிவான வருமானம் (B)	-	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)	**3.69**	**(1.92)**

தணிக்கை செய்யப்பட்ட பணப்புழக்க அறிக்கை

(Rupees in Lacs)

விவரங்கள்	மார்ச் 31, 2023 முடிந்த ஆண்டு	மார்ச் 31, 2022 முடிந்த ஆண்டு
A. செயல்பாட்டிலிருந்து பணப்புழக்கம் செயல்பாடுகள்:		
வரிக்கு முந்தைய நிகர லாபம்	1,859.53	(18.69)
கூட்டுக : தேய்மானத்திற்கு ஒதுக்கீடு	1.81	9.18
கழிக்க : குறுகிய கால ஒதுக்கீடு	-	-
கழிக்க : நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதில் லாபம்	(1,893.09)	-
கூட்டுக : பணமில்லாத பொருள் (வெள்ளம் காரணமாக இழந்த சொத்துக்கள் – தள்ளுபடி செய்யப்பட்டது)	-	-
வரிக்கு முந்தைய நிகர லாபம் மற்றும் கூடுதல் அசாதாரண அயிட்டங்கள்	(31.74)	(9.51)
பணிக்கு முன் செயல்பாட்டு லாபம் மூலதன மாற்றங்கள்	**(437.70)**	**(9.51)**
வர்த்தகத்தில் குறைவு/(அதிகரிப்பு). மற்றும் பிற வரவுகள்	-	-
நீண்ட கால கடன்கள் & முன்பணத்தில் குறைவு/(அதிகரிப்பு)	-	-
நடப்பு முதலீட்டில் குறைவு/(அதிகரிப்பு)	-	-
நடப்பு ஆஸ்திகளில் குறைவு/(அதிகரிப்பு)	(29.77)	(0.02)
பிற ஆஸ்திகளில் குறைவு/(அதிகரிப்பு)	(0.34)	-
குறுகிய கால ஒதுக்கீடுகள் அதிகரிப்பு/(குறைவு)	-	0.15
இதர நடப்பு பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு)	(0.42)	0.50
வர்த்தகம் மற்றும் இதர செலத்தப்பட்டவைகளில் அதிகரிப்பு/(குறைவு)	-	-
செயல்பாடுகளில் இருந்து பெறப்படும் பணம்	**(30.53)**	**0.63**
B. முதலீட்டில் இருந்து பணப்புழக்கம் செயல்பாடுகள்		
முதலீட்டு கொள்முதல்	(23.74)	-
நிலையான சொத்துக்களின் விற்பனை	2,100.00	-
முதலீடுகளின் விற்பனை	-	6.21
நிலையான சொத்துக்களை வாங்குதல்	(1.86)	(1.99)
பிக்செட் டெபாசிட்டில் முதலீடு	-	-
பெறப்பட்ட வட்டி	-	-
முதலீடுகளிலிருந்து டிவிடெண்ட்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பண வெளியேற்றம்	**2,074.40**	**4.22**
**C. நிதியிலி